# விபரீத விதவை!




ரூ.4.50/-

டிடெக்டிவ்
சார்லஸின்
முழு நீள க்ரைம்
த்ரில்லர்!



# ஹாட் - லைன்!

வெளியீடு நிர்: 113
ஜுன் '95

எச்சரிக்கை: ஐரோப்பா பயணத்தை முடித்து விட்டு மே துவக்கத்தில் திரும்பினேன். அது பற்றி அறுக்க வேண்டாமா?

வாசக நண்பர்களே,

வணக்கம். "லயன் Top 10 ஸ்பெஷல் படியுங்கள் - கோடையின் கடுமைக்கு 'Take it easy' சொல்லுங்கள்" என்று விளம்பரப்படுத்தியிருந்தேன் அல்லவா?

இப்போது புதியதொரு Slogan உருவாக்கியிருக்கிறேன்:

"ஏப்ரல் துவக்கத்தில் ஐரோப்பா செல்லுங்கள் - கோடையின் கடுமையே Welcome, Welcome என்று சொல்வீர்கள்!"

'என்ன ஆச்சு இவனுக்கு?' என்று யோசிக்கிறீர்களா?

ஐரோப்பாவில் ஏப்ரல் நடுவிற்கெல்லாம் குளிர் விலகி 'குளு குளு' climate இருப்பது வழக்கம். ஆனால் இந்த வருஷம் என்னவோ பயங்கரமான குளிர்! 'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்பது பழமொழி அல்லவா? எனக்கோ - 'வெயிலின் அருமை 0° டிகிரி குளிரில்தான் தெரியும்" என்ற எண்ணம்! காலமாய் 40° வெப்பத்தைக் கண்டு பழகிவிட்டு - திடீரென்று 0° டிகிரி குளிரை சந்திப்பது என்றால் அது ஒரு படு வித்தியாசமான அனுபவம்தான்!

'வித்தியாசமான அனுபவங்கள்' என்னும் போது இன்னொரு விஷயத்தைப் பற்றி எழுத நினைக்கிறேன்.

மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்யும் போது அவர்களது செல்வச் செழிப்பு; விஞ்ஞான முன்னேற்றம்; சொகுசான life-style எல்லாவற்றையும் பார்க்கும் போது பெருமூச்சு விடத்தான் தோன்றும். ஆனால் இந்தத் தடவை கிழக்கு ஐரோப்பியப் பகுதிகளையும் எட்டிப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது! கம்யூனிஸக் கொள்கையில் ஆழ்ந்திருந்து சமீபத்திய மக்கள் புரட்சிக்குப் பின்னர் ஜனநாயகத்துக்கு மாற முயற்சி செய்து கொண்டிருக்கும் தேசங்கள் இவை! ஒரு காலத்தில் செழிப்பாக இருந்த இந்த நாடுகள்/நகரங்கள் இன்று சோபையிழந்து - சோற்றுக்கு லாட்டரி அடிக்கும் நிலையில் இருப்பது கண் கூடாகத் தெரிகின்றது! பெர்லின் நகரம் இதற்கு ஒரு striking example! உலகப் போரின் முடிவிற்குப் பின்னர் பெர்லினின் ஒரு பகுதி நேச நாடுகளின் கட்டுப்பாட்டிலும், இன்னொரு பகுதி கம்யூனிஸ நாடுகளின் கட்டுப்பாட்டிலும் இருந்தது. நகரின் நடுவே எழுப்பப்பட்டிருந்த மாபெரும் சுவரைக் (Brandenburg gate என்று பெயர்) கடந்து செல்வது சாதாரணக் காரியமல்ல! ஆனால் 1990ல் புரட்சி வெடிக்கத் துவங்கியதைத் தொடர்ந்து - பெர்லினின் சுவர் தரைமட்டமாக்கப்பட்டு பெர்லின் ஒரே நகரமானது! ஆனால் -

நேச நாடுகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதி வழக்கமான வளமையோடு இன்றும் ஜாலியாக இருக்கிறது! சுவரின் மறுபக்கமிருந்த பகுதியோ - புராதனக் கட்டிடங்கள், டப்பாக் கார்கள், வேலையில்லா திண்டாட்டம், சுத்தமின்மை என்று பல குறைகளோடு சோகமாய் நிற்கின்றது! ஒரே நகரத்தில் இரு விதமான வாழ்க்கைத் தரங்கள்; பொருளாதார சூழ்நிலை! இந்த நிலை மாறி கிழக்கும், மேற்கைப் போலவே செழிப்பாகிட குறைந்தது 15 வருஷங்களாகும் என்று சொல்கிறார்கள்! Good luck to them!

அப்புறம் நமது படைப்பாளர்கள் பலரை சந்தித்து கதைகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்! புதிதாய் அறிமுகமாகவிருக்கும் ஹீரோக்களைப் பின்பகுதியில் உள்ள விளம்பரங்களில் சந்திக்கலாம்!

சென்ற மாத அதிரடி வெளியீடான "லயன் Top 10 ஸ்பெஷலுக்கு" சூப்பரான வரவேற்பு கிடைத்திருப்பது மிகுந்த உற்சாகமளிக்கிறது! அடுத்து வரும் கோடை மலர் இதை விடப் பெரிய முயற்சியாக இருக்க வேண்டுமென்று அனைவருமே கேட்டிருப்பதைப் பார்க்கும் போது - தரமான கதைகளைப் படித்திடும் உங்கள் ஆர்வத்திற்கு விலை ஒரு பொருட்டல்ல என்று புரிகிறது!

எதிர்பார்த்தபடியே டெக்ஸ் வில்லர் கதைக்குத் தான் முதலிடம் கிடைத்துள்ளது. அதைத் தொடர்ந்து பிரின்ஸ்; மாடஸ்டி பிளைஸி; காரிகன்; மின்னல் படையினரின் கதைகளுக்கும் பலத்த applause

நமது வாசக ஓவியரான தி. ரமேஷ் உருவாக்கிய ஸ்பைடர் கதைக்கு mixed reactions! அவரது சித்திரத் தரம் அனைவரையும் கவர்ந்திழுத்து விட்ட போதிலும், வலுவான கதையில்லையே என்று சிறு குறைபாடு! அடுத்த முயற்சியில் அந்தக் குறையையும் ரமேஷ் நீக்கி விடுவார் என்று எனக்குத் தெரியும்! லக்கி லூக் & ரிப்போர்டர் ஜானி குட்டிக் கதைகளுக்கும் பாராட்டுக்கள்தான்! ஆனால் -

மின்னல் மனிதன் & இரும்பு மனிதன் ஆர்ச்சி கதைகளுக்கு 'சொதப்பல்' என்ற சர்டிபிகேட் தான் கிடைத்துள்ளது. So - மின்னல் மனிதனை மூட்டை கட்டியாகி விட்டது; ஆர்ச்சிக்கு தற்காலிக ஓய்வு! புதிய பகுதியான "மாதம் ஒரு ஹீரோ" சுவையாக உள்ளதாக அனைவருமே அபிப்ராயப்பட்டுள்ளனர். 'போட்டிகள் அதிகம் இல்லையே' என்று ஒரு சில வாசகர்கள் குறைபட்டுள்ளனர். அடுத்து வரவிருக்கும் ஆண்டு மலரில் அந்தக் குறையை நிவர்த்தி செய்து விடுகிறேன்!


இந்த மாதம் நீங்கள் சந்திக்கப் போவது வித்தியாசமானதொரு துப்பறிவாளரை! டிடெக்டிவ் சார்லஸும், அவரது பெண் உதவியாளரும் வழக்கமான துப்பறியும் பணிகளை ஏற்றுக் கொள்வதில்லை. அமானுஷ்ய சங்கதிகள், விசித்திர மர்மங்கள் போன்ற விவகாரங்களை மட்டுமே இவர்கள் ஆராய்வார்கள்! இந்த ஜோடியின் முதல் சாகஸமான "விபரீத விதவை"யைப் படித்துப் பார்த்து விட்டு கட்டாயம் உங்கள் எண்ணங்களை எழுதியனுப்ப வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த மாதம் நமது பதினோராவது ஆண்டு மலர் வருகிறது! காமெடி கௌ-பாய் லக்கி லூக் "பூம் - பூம் படலத்தில்" உங்களை சந்திப்பார்! இந்த இரு வண்ணக் காமெடி ஸ்பெஷலை படிக்கத் தவறாதீர்கள்!

ஆகஸ்ட் மாதம் ரிப் கிர்பியின் "இரத்தக் கரம்" வரும். (ஏனோ தெரியவில்லை. இந்தக் கதையும் தாமதமாகிக் கொண்டே போகின்றது.)

அதைத் தொடர்ந்து வரப்போகும் கதைகளைப் பற்றியும், இந்த வருடத்து தீபாவளி மலரைப் பற்றியும் அடுத்த மாதம் எழுதுகிறேன்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அதுவரை - good bye & happy reading!



அன்புடன்,

ஆசிரியர்.

பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன், முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ், தபால் பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123. போன் : 20649 அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.



விபரீத
விதவை!


நள்ளிரவை நெருங்கும் நேரம் அது -
இந்த இடம் தான்..! காரை இங்கே நிறுத்தி விட்டு நடந்து போவோம்!
இது முறை அல்லவே!
திருட்டுத் தனம் தான்-அதில் தானே சுவாரஸ் யமே இருக்கிறது!
ஒரு வேளை பிடி பட்டால்...
அப்படி எல்லாம் நடக்காது... ஏறி வா
அவர் களுக்கு கேட்காமலா இருக்கும்?
கேட்காது..! அயர்ந்து தூங்கிக் கொண்டிருப் பார்கள் -இந்நேரம்!





இதுதான் நான் சொன்ன நீச்சல் குளம்!
படு ஜோர்!
நேரம் வீணாகிறது.. சீக்கிரம் இறங்கு
ரிக்.. கொஞ்சம் யோசி
யாயா.. ஹூ!
ரீடா.. இறங்கி வா.. அமர்க் களமாக இருக்கிறது
உஷ்ஷ்.. கத்தாதே!
ஜில்லென் றிருக்கிறது
பின்னே.. நீ வருவாய் என்று ஹீட்டரை போட்டே வைத்திருப் பார்களா?
நள்ளிரவு திருட்டுக் குளியல் உற்சாக மளிக்கிறது!


க்ரீக்!
அ..அ.. அதென்ன சப்தம்?
எனக்கு எதுவும் கேட்க வில்லையே
அதோ.. மறுபடியும் கேட்கிறது... யாரோ வருகிற மாதிரி
ஏய்.. என்னை விட்டுப் போகாதே
அணில் சருகு களிடையே ஓடும் சப்தமாக இருக்கும்.. இரு - போய் பார்த்து விட்டு வருகிறேன்
குளத்தின் மத்தி யிலேயே இரு..
ரிக்.. நானும்..
உஷ்.. புலம்பாதே -சும்மா!
ரிக்?


ரிக்?


ஏதாவது கண்ணில் பட்டதா?
ம்ம்ப்ப்..
ரிக்.. பயம்மாக இருக்கிறது -இங்கிருந்து போய் விடலாம்
ம்ம்ப்ப்..
குனோரின் எரிச்சலூட்டு கிறது.. கண்ணை திறக்க முடிய வில்லை.. ரிக்.. ஒத்தாசை செய்!
க்ர்ர்ர்க்க..
ரிரி..க்!


ஓரிரு நாட்கள் கழித்து - டிடெக்டிவ் சார்லஸின் அலுவலகத்தில் -
நீச்சல் குளத்தின் ஆழமில்லாத ஒரு மூலையில் என் மகள் சுருண்டு கிடந்ததை தோட்டக்காரன் மறுநாள் காலையில் பார்த்திருக்கிறான். அதிர்ச்சியடைந்த நிலையில் அவள் ஏதேதோ புலம்பியிருக்கிறாள்..
சற்றைக்கெல்லாம் போலீஸ் அங்கே வந்து அவளை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். உடல் நலத்தை பொறுத்த மட்டில் எந்தக் குறையுமில்லை. ஆனால் மனத்தளவில்.. எதுவும் இப்போதைக்கு சொல்வதற்கில்லை என்கிறார்கள் மருத்துவர்கள்.
அவளு டைய பாய் பிரண்ட்.. ரிக் என்ன வானான்?


திரும்பி வந்தவன் என் மகளுக்கு அருகே நீரில் பிணம் ஒன்று மிதப்பதை கண்டதும் மிரண்டு போய் ஓட்டம் பிடித்திருக்கிறான் மற்றபடி அந்த பிரேதம் பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என்கிறான்
ரீடாவால் இன்னமும் சுவாதீன மாக பேச முடிய வில்லை -இல் லையா?
தேறி வருகிறாள்.. முழுவது மாக தேறும் வரை அவளை தொந்தரவு பண்ணக் கூடாது என்கிறார் டாக்டர்!
சரி இதுவரை நடந்ததை கோர்வையாக பார்ப்போம்... அந்த இளைஞனின் கூற்றுப்படி அவனும் உங்கள் மகளும் நிலாவொளியில் நீந்தி மகிழ ப்யூல் மான்ஷனில் உள்ள நீச்சல் குளத்துக்குத் திருட்டுத்தனமாக போயிருக்கிறார்கள்.. ஏதோ ஓசை கேட்கவே அது என்னவென்று அறிய அவன்
கரையேறி போயிருக்கிறான். திரும்பி வந்தவன் உங்கள் மகள் அருகே பிரேதம் ஒன்று நீரில் மிதக்கக் கண்டு மிரண்டு போய் ஓட்டம் பிடித்திருக்கிறான்..
...அவனிடம் பணம் எதுவும் காணப்பட வில்லையாதலால் அவன் மீது போலீஸாருக்கு சந்தேகம் கிடையாது. அத்தோடு, மறுநாள் பிரேதம் கண்டெடுக்கப்பட்ட போது அது இருந்த நிலையை வைத்து நீரில் விழுவதற்கு முந்தைய தினமே நபர் செத்துப் போயிருக்கக் கூடும் என்று தெரிய வருவதால் காதல் ஜோடிகள் குற்றவாளிகள் இல்லை என்றாகிறது. இப்படியிருக்க என் உதவியை நாடி நீங்கள் வந்த காரணம் என்ன மிஸ்டர் வெக்ஸ்லர்?


சொல்லத் தெரியவில்லை எனக்கு.. எங்கோ உதைக்கிறது மிஸ்டர் சார்லஸ்.. என் மகள் ஒரு மருத்துவ கல்லூரி மாணவி. அப்படியிருக்க ஒரு பிரேதத்தை கண்டு இந்த அளவுக்கு பீதியடைவாளா..?
சூழ்நிலை காரணமாக இருக்கலா மில்லையா?
குளத்தில் தனித்து இருந்திருக்கிறாள்... ஏதோ சலசலப்பு கேட்டிருக்கிறது... சற்றைக் கெல்லாம் திடீரென்று ஒரு பிரேதம் தன் அருகே மிதக்கக் காண்கிறாள்.. இந்த சூழலில் யாராக இருந்தாலும் திடுக்கிட்டுத் தானே போவார்கள்?
திடுக்கிடலாம்.. ஆனால் இப்படி அதிர்ந்து போவார்களா? இன்னொரு விஷயம். அந்த பிரேதம் ஏன் அவர்கள் நீரில் இறங்கிய பின்னரும் முன் கூட்டியே கண்ணில் படவில்லை?
இரவு நேரம்...
பௌர்ணமி நிலவொளி பிசிறின்றி பரவியிருந்திருக்கிறது. நீர்ப் பரப்பில் முதலில் சிறு துரும்பு கூட கண்ணில் படவில்லை என்று அந்த இளைஞன் அடித்துச் சொல்கிறான்.
அப்புறமாக யாரோ கொண்டு வந்து குளத்தினுள் வீசியிருக் கிறார்கள் என்கிறீர் களா..?
அவர்கள் அங்கே போனபோது பிரேதம் அங்கே இருந்திருக்கலாம் என்பதை நம்ப மாட்டேன் என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன்.


மறு நாள்—
அந்த பிரதேம் தானாக நடந்து வந்து குளத்தினுள் குதித்திருக்க முடியாது..
இதையாவது ஏற்றுக் கொள்வீர் களல்லவா?
ஓகே., இந்தக் கேஸை நான் எடுத்துக் கொள்கிறேன்!
...உன் மையை வெளிக் கொணர நமக்கு ஆயிரம் டாலர்கள் தர
தயாராக இருக்கிறார் அந்தப் பெண்ணின் தந்தை.
கோடீஸ்வரர் ப்யூலின் பிணம் நீச்சல் குளத்தில் மிதந்தது.
இது கொலையாக இருக்கலாம் என்று போலீஸ் சந்தேகிக்கிறது.
தன் மகளுக்கு நேர்ந்த கதியை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை -அதுதான் காரணம்.
சரி.. நாம் எங்கே ஆரம்பிக் கிறோம்?
ப்யூல் மாளிகை யில்! ப்யூலின் மனைவியை முதலில் விசாரிப் போம்.
போலீஸ் அவளை இன்னமும் விசாரிக் காமலா இருக்கும்?
ஆனால்.. நமக்கு ஒரு தொடக்கம் கிடைக்க வேண்டு மல்லவா...
பிரேத பரி சோதனை என்ன சொல்கிறது..? மரணத்திற் கான காரணம் தெரிந்து விட்டதா?
ம்..ம். அவருடைய உடம்பி லிருந்து 90 சதவீத இரத்தம் உறிஞ்சப் பட்டிருக் கிறது!
மேங்!


குட் ஆப்டர் நூன்! என் பெயர் சார்லஸ்... இவள் - என் பார்ட்னர் லிஸா! வீட்டு எஜமானி உள்ளே இருக்கிறார்களா?
நான்தான் வீட்டு எஜமானி!
மிஸஸ் ப்பூலா! பேப்பரிலே உங்க போட்டோ.. முடி கருமையான தாக...
என் பெயர் எலிஸபெத்! இரண்டு தினங்களுக்கு முன்புதான் மிஸஸ் ப்பூலிடமிருந்து இந்த வீட்டை வாங்கினேன் - திடும் என ப்பூலின் சடலம் நீச்சல் குளத்தில் வெளிப்பட்டது. மிஸஸ் ப்பூல் எங்கோ தலைமறைவாகி விட்டாள்.. போலீஸ் வந்து பண்ணுகிற அட்டகாசம் பொறுக்க முடியவில்லை.
மிஸஸ் ப்பூல் ஓடிப் போய் விட்டாளா?
இந்த மாளிகையை நான் வாங்கியிருக்கவே கூடாது... கொஞ்சம் கூட நிம்மதியே யில்லை. போலீஸ் மற்றும் நிருபர்களின் தொல்லை தாங்கவில்லை... தயவு செய்து போய் விடுங்கள்.. ப்ளீஸ்.
மிஸஸ் ப்பூலை போலீஸ் தேடிக் கண்டு பிடித்து விட்டால்
அவள் தான் கொலைகாரி என்ற உண்மையும் வெளிவந்து விடும்.
இருக்கலாம்.. ஆனால் கணவனின் சொத்துக்களுக்கு வாரிசாகும் எண்ணத்தோடு அவள் கொலையை செய்திருந்தால் ஏன் ஓடிப் போனாள்?
அவளுக்குக் கள்ளக் காதலன் யாராவது ...?
அவளுடைய காதல் எல்லாம் பணத்தின் மீதுதான்.. வா.. போய் போலீஸா ரிடம் பேசிப் பார்ப்போம்.
மடோர்!



உள்ளூர் போலீஸ் நிலையத்தில் -
குடும்பத்துக்கு சொந்தமான வெளிப் பெட்டகம் ஒன்றில் நகைகளும், ரொக்கமும் பத்திரப் படுத்தப்பட்டிருக் கின்றன. ஒன்று மிஸஸ் ப்யூலுக்கு யாராவது கள்ளக் காதலன் இருக்க வேண்டும்.
அல்லது விரைவிலேயே அவளும் தன் கணவனைப் போல் பிணமாகிப் போகக் கூடும்...
சரி.. கிளம்புங்கள் என்க்கு வேறு வேலை நிறைய இருக்கிறது.
உன்னுடைய காகம் எச்சம் போட்டு என் அலுவல கத்தை, நாசமாக்கு வதற்கு முன் வெளியே கொண்டு போய்விடு.
இது காகம் இல்லை.. அண்டங் காக்கை!
அலுவலகத்திற்குத் திரும்பினர்.
என்னடா கண்ணா.. போரடிக்கு தா.. படம் பார்க் கிறியா?
சார்லஸ்... உங்களால் ஆனதை செய்து விட்டீர்கள்.. வெக்ஸ்லரும் பணம் கொடுத்து விட்டார்.. மிச்சத்தை போலீஸ்தான் பார்த்துக் கொள்ள வேண்டும் -அப்படித்தானே?
எங்கே கிளம்பி விட்டீர்கள்.. அந்த மாளிகைக் கா..? வெரிகுட்..
அந்த இடம் ஏனோ புதிராகவே தோன்று கிறது எனக்கு!
தம் முயற்சிக்கு தூண்டு கோலே அதுதானே!


அதைத் தொடர்ந்து -
நில வொளியும் அன்று போல் தெளிவாக இருக்கிறது..
காரை இங்கேதான் நிறுத்தி னார்கள்..
நெஞ்சு தடக் தடக் என்று அடித்துக் கொள்கிறது.
சார்லஸ் -என்ன இது? மறை கழன்று விட்டதா உங் களுக்கு?
நீயும் வா இங்கே -தண்ணீர் இதமாக இருக்கிறது!
உங்களோடு ரோதனை யாகப் போச்சு... அப்பப்பா.. நீர் ஜில்லென்றி ருக்கிறது.
ரீடாவும் இதையே தான் சொல்லி யிருக் கிறாள்.
ஓவ்வ்வ.. பனிச்சுனை யினுள் இருப்பது போல் விறைக்கிறது எனக்கு..
அ..அ..து என்ன சப்தம்?





அனில் ஓடிய சப்தமாக இருக்கும் -இரு.. பார்த்து விட்டு வருகிறேன்.
ரிக் இப்படித் தான் சொல்லிச் சென்றான்.
தெரியுமே!
ஆனால் ரீடாவைப் போல் நான் இங்கே தனித்து பின் தங்கப் போவ தில்லை.
சரி.. கிளம்பு - நீயும்!
சொன்னே னில்லையா? - அனிலின் சேஷ்டை தான்!
இங்கே வேறு.. ஏதோ.. வித்தியாச மாக.. என் உள்ளு ணர்வு கூறுகிறது..
மனக் கண்ணில் -தெளி வில்லாமல்.. ஏதேதோ -
என்ன சொல்ல வருகிறாய் லிஸா?
நிழல் தோற்றம்.. படு பயங்கரம்.. ஏதோ.. மெள்ள வருகிறது.
ஓ.. கடவுளே! இ.. இது -மிஸஸ் ப்யூல் அல்லவா? உ.. உ.. உயிரோடு தோலுரிக்கப் பட்டு... ஆ.. ஆ..



ஆஆஆஆ
போ.. போ.. போய்விடு -சைத் தானே!
மறுநாள் காலை -
ஒரு பெண்ணை உயிரோடு தோலுரிப்பது; அவளுடைய கணவனின் இரத்தத்தை உறிஞ்சி எடுப்பது -இப்படியொரு கொடுமையை யார், எதற்காக செய்திருப்பார்கள்? பணம் காணாமல் போகவில்லை... நோக்கம் எதுவும் புலப்படவில்லை!
நோக்கம் இருக்கும்.. கண்டு பிடிக்க வேண்டும்!
எலிஸபெத் பாவம்.. அவள் அந்த மாளிகையை வாங்கிய நேரம் சரியில்லை!
அவ்வளவு நடந்துவிட்ட பிறகு அங்கே தங்கியிருக்கப் பிடிக்காமல் இன்று காலை அவள் வெளியேறி விட்டதாக தகவல்.
வேறு என்னதான் செய்வாள்.. பேதை!




வேறு எந்த வழக்கும் இத்தனை நாட்களுக்கு புதிராக நின்று போன தில்லை.
சவால்களை கண்டு நாம் துவண்டு போய்விடக் கூடாது.
வா.. ஏதாவது படத்துக்கு போய் விட்டு வருவோம்.. உற்சாகமாக இருக்கும்.
இது இப்படி இருக்க மாதங்கள் பல கடந்தன! அமெரிக்காவின் பிறிதொரு மூலையில் நிசப்தமாக நின்று கொண்டிருந்த பெரியதொரு பங்களாவில் ஒரு நாள் இரவு!
ஆர்தர்...! எழுந்திருங் கள்! தோட்டத்தில் ஏதோ அரவம் கேட்டது
ம்ஹம்ம்...
ஒரு உருவம் தென் பட்டது.. ஜாக்கிரதை ஆர்தர்!
நிஜமா.. இல்லை கனவு கண்டாயா


யார்.. யாரங்கே?
கேட்கிறே னில்லையா.. யாரங்கே?
ஏய்.. என்ன விஷமம் இது.. என்னை
ஆ..வ்வ்!
வ்வ்!


யார்.. ஜெர்ரியா..? சார்லஸ் பேசு கிறேன்..
டின்ஸல் நகரத்தில் நிலவரம் எப்படி போய்க் கொண்டிருக் கிறது?
டல்லடிக்கிறது... சாதாரண பத்திரிக்கை நிருபர்கள் தானே நாங்கள்.. பரபரப்பான சம்பவம் எல்லாம் உன் போன்ற துப்பறிவாளர்களுக்குத் தான் வாய்க்கும்..
இன்னொரு விஷயம்.. கொஞ்ச நேரத்திற்கு முன்னர்தான் செய்தி வந்தது... பிரபல சினிமா டைரக்டர் ஆர்தர் செபஸ்தியனை உனக்கு தெரியுமில்லையா... நேற்றிரவு அவரை அவருடைய தோட்டத்திலேயே யாரோ கொலை செய்திருக்கிறார்கள்..
..போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் என்ன சொல்கிறது தெரியுமா?, ஆர்தரின் உடம்பி லிருந்து 90% இரத்தம் வெளியேறி விட்டிருக்கிற தாம்!
...உனக்கு இதில் ஆர்வம் இருக்குமே என்பதற் காகத்தான் சொன் னேன்.. ஏய்..
... என்ன பதிலைக் காணோம்.




ப்ரூவின் கொலை நடந்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டன.. அதற்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தம் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை...
இரத்தத்தை உறிஞ்சி உயிரை போக்குவது மாமூலான வழிமுறை யல்ல.
மிஸஸ் செபஸ்தியன் தோலுரிக்கப் பட்டு கொலை யுண்டதா கவும்
அடுத்து செய்தி வந்து விட்டால் உங்கள் யூகம் முற்றிலும் சரி என்றாகி விடும்.
எதிர்பார்த்தது நடந்தது! ஆர்தரின் மனைவி மிஸஸ் செபாஸ்டியன் தோலுரிக்கப் பட்ட நிலையில் கோர மாகக் கொலையுண்டு கிடந்தாள்.
இன்று காலையில் புதர் மறைவில் இதை கண்டு பிடித்தோம்..
சார்லஸ்.. உன் கருத்து?
அதே கொலை காரன்தான் இதையும் செய்திருக்க வேண்டும் -மகா கோரம்!
அந்தக் கொலைகள் புதிராக நிலைத்துப் போய்விட்டன... அதையும் இதையும் சம்பந்தப்படுத்தி இரண்டுக்குமிடையே உள்ள ஒற்றுமையை வைத்து ஏதாவது கண்டு பிடிக்க முடியுமா?
கற்பனைக் கும் யூகத்திற்கும் அப்பாற் பட்ட சங்கதியாக இருக்கிறது..




இம்முறை நோக்கம் என்னவாக இருக்கும்? அவருக்கு எதிரிகள் யாரேனும் உண்டா?
இல்லை. அத்தோடு பணம் எதுவும் திருடு போக வில்லை...
உங்களுடைய நகரில் நடந்த சம்பவத்தின் நிலவரம் தான் இதிலும்!
பாவம் செபஸ்தியன் நான்கு மாதங் களுக்கு முன்னர் தான் புதிதாக மணம் புரிந்து கொண்டார்...
நான்கு மாதங்கள்..?
உனக்கும் அதே சிந்தனை தானே?
ஆயிரத்து ஐநூறு மைல்களுக்கு அப்பால் ப்யூல் தம்பதிகள் இதே முறையில் கொலை செய்யப்பட்டு சரியாக நான்கு மாதங்கள்தான் ஆகியிருக்கின்றன..
இன்றைக்கு இரவு இங்கே வந்து சுற்றிப் பார்க்க விரும்பு கிறீர்கள் -அப்படித் தானே?
எப்படி இவ்வளவு சரியாக யூகித்தாய்?
இந்த துப்பறிவாளர்களே இப்படித்தான்... அதைக்கூட யூகிக்க முடியவில்லை என்றால் உங்களுடைய உதவியாளராக இருக்க எனக்கு என்ன தகுதி இருக்க முடியும்!



விளக்கு எரிகிறது..
வீட்டில் இருப்போரை முதலில் விசாரிப்போம்.
உண்மையை சொல்வார்களா!
என் பெயர் சார்லஸ்.. நீங்கள் செபஸ்தியான் தம்பதியினருக்கு சொந்தமா?
இல்லை...! பெயர் மார்த்தா..! இந்த மாளிகையின் புது சொந்தக்காரி. என்ன விஷயமாக வந்திருக்கிறீர்கள்? சொல்லுங்கள்.
உள்ளே வர அனுமதித்தால் விபரமாகச் சொல்கிறேன்!
அதைத் தொடர்ந்து நடந்தது முழுவதையும் விவரித்தார் சார்லஸ் -
..இதுதான் நடந்தது... நீ கதவை திறந்த போது எங்களுக்கு ஏற்பட்ட வியப்புக்குக் காரணம் இப்போது புரிகிறதா..? நான்கு மாதங்களுக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சி அப்படியே மீண்டும் அரங்கேறிய அனுபவம் ஏற்பட்டது எங்களுக்கு.
வியத்தகு ஒற்றுமை.. ஆனால் இந்த மாளிகைக்கு நான்தான் சொந்தக்காரி... வேண்டுமானால் பத்திரங்களை காட்டத் தயார்!
அவசியமில்லை.. அது சரியாகத் தானிருக்கும்
ம்ம்.. குடிக்க கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?
ஓ.. ஷ்யூர்!



பிளாஸ்டிக் சர்ஜரியாக இருக்குமோ!
இராது... முக தோற்றத்தை வேண்டுமானால் மாற்ற முடியுமே தவிர உயரத்தை, நிறத்தை மாற்றவே முடியாது... எலிஸபெத் உருமாறி இங்கே மார்த்தாவாக காட்சியளிக்கிறாளோ என்கிற உன் சந்தேகத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.
இந் தாருங்கள்..
நன்றி..! ஒவ்வ்.. ஸாரி..!
படார்!
வேண்டாம். விடுங்கள்.. அப்புறமாக வேலை யாட்கள் சுத்தம் பண்ணி விடு வார்கள்.
இல்லை நானே செய்வது தான் சரி!
சில துண்டுகளை அபேஸ் பண்ணிக் கொண்டு வந்து விட்டா யல்லவா?
அந்த நாடகமே அதற்காகத் தானே!
சரியான துண்டு களாக
அகப்பட் டிருக்க வேண்டும்..!
இதோ.. தெளிவான ரேகைகள்... ம்ம்... ஆனால் இவை உன்னுடை யவை. அடுத்து. ஆவ்.. இவை - மிஸ் மார்த்தாவு டையவை!
வேலையாட் களுடைய தாக இருந்து விடக் கூடாது!



யார் ப்ரெடியா? சார்லஸ் பேசுகிறேன்.. லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து ! சில ரேகை பதிவுகளை இன்றிரவே உனக்கு அனுப்பி வைக்கிறேன் - யாருடையது என்று நீ கண்டறிந்து சொல்ல வேண்டும்!
அடுத்து?
ப்ரெடியிட மிருந்து பதில் வரும் வரை ஜாலியாக காத்திருப் போம்?
ஏதாவது ஒரு சினிமா வுக்கு போய் வருவோ மா?
சற்றைக் கெல்லாம் -
சார்லஸா? ப்ரெடி பேசுகிறேன்.. சிகாகோவிலிருந்து! நீ அனுப்பிய ரேகை பதிவு வந்து சேர்ந்தது.. அது நியூயார்க்கிலுள்ள மிஸ் எலிஸபெத் என்னும் பெண்ணுடையது.
கிடைத்து விட்டதாம்.. எலிஸபெத் தினுடைய தாம்!
பொறு.. மிச்சத் தையும் சொல்லி விடுகிறேன்!





இதே ரேகைகள் வேறு பல பெண்மணிகளுக்கும் பொருந்துகிறது. இடாஹோ நகரில் ஜூலி என்ற பெயரிலும், டசிஹே நகரில் க்ளாரியா என்ற பெயரிலும் இருந்த பெண்களின் ரேகை இதேதான்! ஒரே பெண் பல இடங்களில் பல பெயர்களில் ஆள் மாறாட்டம் செய்து வருகிறாள்!
உங்களுடைய பைலின்படி முதன் முதலில் இந்த ரேகைகள் யாருடையவை என்று பதிவாகியிருக்கின்றன?
..ம்ம்.. ஸன்னிடேலில் உள்ள சார்லட் என்பவளுடையது என்பதாக! மியாமி ஸ்டேட்டில் அவள் யுனிவர்ஸிடியில் படித்துக் கொண்டிருந்த போது வைத்திருந்த அடையாள அட்டையிலிருந்து எங்கள் பைலுக்கு கொண்டு வந்த ரேகை அது.
பத்து வருடங்களுக்கு முன் அங்கே அவள் விலங்கியலை பாடமாக படித்து வந்திருக்கிறாள்.
..அப்போது அங்கே புரபஸராக இருந்த எமில் பெல்ஃப்லை சந்தித்து விசாரித்தால் மேல் விபரம் கிடைக்கலாம்..
பின்னர் -
சிலந்தி பற்றியா?
ஆமாம்.. சார்லட் என்னிடம்தான் பயின்றாள்.. மகா புத்திசாலி.. சிலந்தி பற்றிய ஆராய்ச்சியில் அவளை மிஞ்சிய மாணவர்கள் யாரும் கிடையாது..


ஆமாம்.. அவற்றில் காணப்படும் விநோத மான உடலியல் மாற்றம் அவளு டைய கவனத்தை ஈர்த்தது..
..சிலந்தியின் ஒரு காலை வெட்டிவிட்டோமே யானால் அது சீக்கிரமே மீண்டும் வளர்ந்துவிடும் - இது மாதிரி! இரவு பகல் பாராமல் முழுக்க ஆராய்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.. ஆனால்.. பாவம்..
..என்னவா யிற்று?
அவள் செத்துப் போனாள்.. ஆமாம் செத்துத்தான் போயிருக்க வேண்டும் - இதற்குள்! அவள் இங்கே பயின்று கொண்டிருந்த காலத்திலேயே புற்று நோய் முற்றிவிட்டிருந்தது... இவ்வுண்மை உங்களுக்கு தெரியாதா? ....
எனக்கு தலையை சுற்றுகிறது..
எனக்கு மட்டும் என்னவாம்! சரி.. வா.. போன் டைரக்டரியை புரட்டி ப்ளோரிடாவில் இன்னமும் சார்லட்டின் குடும்பத்தினர் யாரேனும் வாழ்ந்து வருகிறார்களா என்று பார்ப்போம்!
அதைத் தொடர்ந்து -
நீங்கள்..?
மிஸ்டர் பார்க்கர்..? நான்.. சார்லஸ்! உங்கள் மகள் சார்லட் டோடு கொஞ்ச காலம் படித்தவன். அவளைத் தேடி வந்தேன்.


நிறையப் பேர் அவளை தேடி அலைகிறார்கள் மிஸ்டர் சார்லஸ் - நாங்களும் அந்தப் பட்டியலில் அடக்கம்! யுனிவர்ஸிடியை விட்டு வெளியேறிய நாளிலிருந்து அவள் மாயமாக மறைந்துபோய் விட்டாள். அவள் எங்கேயாவது செத்துப் போயிருக்கக் கூடும்.. அவளுக்கு புற்று நோய் இருந்த விபரம் உங்களுக்குத் தெரிந்திருக்குமே?
ம்ம்.. தெரியும்!
நட்பின் பேரில் கேட்கிறேன்.. அவளுடைய போட்டோ ஒன்று கிடைக்குமா?
மாடியில் உள்ள அவளுடைய அறையில் கிடைக்கலாம். தேடி எடுத்துக் கொள்ளும் சிரமம் உங்களை சேர்ந்தது - நான் இப்பொழுதெல்லாம் மாடிக்கு ஏறுவதே கிடையாது.
கடவுளே..!


...'ப்ளாக் விடோ'வின் வாழ்க்கை முறை பற்றிய பாடப் புத்தகம்! ப்ளாக் விடோ என்பது கடும் விஷம் கொண்ட சிலந்தி என்பதாக படித்த ஞாபகம்.
சார்லஸ்.. இது - டைரி மாதிரி இருக்கிறது.
ஜூன் 2 - யுனிவர்ஸிடியை விட்டு வெளியேறினேன். புதிருக்கு விடை தெரிந்து கொள்ளும் வெறி என்னை ஆட்டுவிக்கிறது. ப்ளாக் விடோவின் விஷம் படு பயங்கரமானது.. அதை மைகலோமோர்ப் கஷாயத்திலிட்டு வேகத்தை தணிக்க முடிகிறது..
அது என்ன 'மைகலோமோர்ப்!'
இரு.. பார்த்துச் சொல் கிறேன் - அதுவும் ஒரு சிலந்தி வகை!
ஜூலை 10.. உடல் நலம் சீர் கெட்டு வருகிறது.. முன் போல் கடுமையாக உழைக்க முடியவில்லை.. வியாதி என் உயிரை உறிஞ்சு முன் புதிருக்கான விடையை நான் கண்டுபிடித்து விடவேண்டும்..
இன்றிரவு ஓய்வு ஒழிச்சலின்றி ஆய்வில் ஈடுபடப் போகிறேன்..
..இதுதான் கடைசியாக எழுதப்பட்டிருக்கிறது.


அதன் பிறகு என்ன நடந் திருக்கும்?
சார்லட் ஒரு அறிவு ஜீவி.. புற்றுநோய் கெடு வைத்துவிட்ட நெருக்கடியிலும் சிலந்திகள் பற்றிய ஒரு புதிருக்கான விடை தேடி இராப் பகலாக ஆய்வு நடத்தியிருக்கிறாள்.
இந்நிலையில் திடீரென்று மாயமாக மறைந்து விட்டாள்.. பத்து வருடங்களுக்குப் பின் அவளுடைய கை ரேகையை உடைய எலிஸபெத் என்னும் பெண்மணி ப்யூல் மாளிகையை விலைக்கு வாங்குகிறாள்.. ஓரிரு தினங்களுக்குப் பின் ப்யூல் தம்பதியினர் அதே மாளிகை வளாகத்தினுள் புதிரான முறையில் செத்துப் போயிருக்கிறார்கள்.


இது நடந்து நான்கு மாதங்களுக்குப் பின் அவ்விருவரின் கைரேகையை ஒத்த கைரேகை உடைய மார்த்தா என்னும் பெண்மணி கலிபோர்னியாவில், லாஸ்ஏஞ்சல்ஸில், செபஸ்தியன் மாளிகைக்கு சொந்தக்காரியான ஓரிரு நாட்களில்
முந்தைய உரிமையாளரான செபஸ்தியனும் அவருடைய மனைவியும் முந்தைய வழக்கில் கண்டறியப்பட்ட அதே வழிமுறையில் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள். ஆனால் மார்த்தா மற்ற இரு பெண்மணிகளோடு உருவ ஒற்றுமையில் பெரிதும் வேறுபடுகிறாள்.. அந்த மாற்றம் பிளாஸ்டிக் சர்ஜரியினால் கூட சாத்தியமில்லை!



நீங்கள் சொல்வது எதுவுமே அர்த்தமாக வில்லை எனக்கு
அப்படி யில்லை.. இந்த சம்பவங்கள் மேலோட்ட மாக தனித்தனி துண்டு களாக
காணப் பட்டாலும் ஊடு இழையாக ஒரு ஒற்றுமை எனக்கு புலப்படு கிறது!
ப்ரெடி... மறுபடியும் தொந்தரவு தருவதற்கு மன்னிக்க வேண்டும்.. இன்னொரு செட் கைரேகை களை நீ சரி பார்த்துச் சொல்ல வேண்டும்.
மீண்டும் லாஸ் ஏஞ்செல் போகி றோமா?
ஆமாம்.. நாம் போய்ச் சேருமுன், ப்ரெடி விடையோடு காத்திருப்பான்..
அந்த புதிர்ப் பெண் மார்த்தாவிடம் இன்னும் சில கேள்விகள் கேட்க வேண்டியிருக்கலாம்.
சார்லஸ்.. டிரக் ஒன்று ரெடியாக நிற்கிறது பாருங்கள்..
வீட்டை காலி செய்கிறாள் போலும்!
முந்தைய வழக்கிலும் இப்படித் தானே நடந்தது..?
மிஸ் மார்த்தா..
எங்கே கிளம்பி விட்டீர்கள் -இவ்வளவு அவசர மாக?
ஓ.. மீண்டும் நீங்களா?


உங்களுடைய லைப்ரரி படு சூப்பராக இருக்கிறது மிஸ். பொதுவாக விஷ சிலந்தியின் பெயரை கேட்டாலே சிலருக்கு நடுக்கம் எடுத்து விடும்.. நீங்களானால் அது சம்பந்தப்பட்ட ஆய்வு புத்தகங்களுக்கு ஒரு செக்ஷனே ஒதுக்கியிருக்கிறீர்கள்!
அசம்பாவிதங்கள் நிகழ்ந்த பிறகு இங்கே வாழ நான் பிரியப்படவில்லை. கிடைத்த விலைக்கு தள்ளிவிட்டு விடலாம் என்று தீர்மானித்து விட்டேன்.
அந்த போன் எனக்குத் தான்... என் நண்பன் ஒருவனுக்கு
நான் இங்கிருப்பதாக நம்பர் கொடுத்திருந்தேன்!
கிர்ர்ரிங்
சார்லஸ்..! நீ கோரியபடி சார்லட்டின் கைரேகைகளை மிஸஸ் செபஸ்தியன் மற்றும் மிஸஸ் ப்யூலின் ரேகைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தேன்..
அப்படியே பொருந்துகிறது.. இவை மிஸ் மார்த்தாவின் கைரேகைகளோடும் ஒத்துப் போகின்றன.. எனக்கு தலையை சுற்றுகிறது.. அப்பனே!
நீ மட்டும் என்னவாம்.. மதியூக மிக்க விஞ்ஞானி.. ஆனால் சுயநலவாதி.. உண்மையிலேயே நீ புற்று நோய்க்கு தீர்வு ஒன்றைக் கண்டுபிடித்திருந்தால் அதை ஏன் உலகத்தாரின் முன் சமர்ப்பிக்கவில்லை?
ஆனாலும் நீங்கள் லேசுப்பட்ட வரல்ல மிஸ்டர் சார்லஸ்!


பக்க விளைவு தான்...., காரணம்! அது என்ன வென்று நான் சொல்லா மலேயே நீங்க ளாகவே யூகித்து விட்டதாக தெரிகிறது..
என் யூகம் ஓரளவுதான்.. ஸ்பைடரின் வீரம் உன் புறத் தோற்றத்தை முழுமையாக மாற்றி விடுகிற உண்மை புரிந்தாலும் ஒவ்வொரு தடவையும் உன் அப்போதைய கணவனை நீ கொல்ல வேண்டிய அவசியம் என்ன வந்தது என்றுதான் விளங்கவில்லை!
அதுதான் சொன்னேனே... பக்க விளைவு என்று! உறவாடி முடிந்ததும் ப்ளாக் விடோ சிலந்தி தன் ஜோடியை தின்று விடும் என்பது ஊரறிந்த உண்மையாயிற்றே.. அப்படியொரு பக்க விளைவை என்னதான் முயன்றும் என்னால் தவிர்த்துக் கொள்ளவே முடியவில்லை!
சார்லஸ்... இவள் சொல்வதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.... உடலுறுதியில் இவள் ஒரு சராசரி பெண்.. அந்த ஆடவர்களை எப்படி இவளால் தீர்த்துக் கட்ட முடிந்திருக்கும்?
சொன்னால் நம்ப மாட்டீர்கள்.. நான் நினைத்த போதெல்லாம் அப்படியொரு பக்க விளைவை உருவாக்கிக் கொண்டு விட முடியும்.


இதோ.. நொடியில் புரிந்து விடும் -ஹ..ஹ.. ஹா..
வா.. ஓடிப் போய் விடுவோம்!
துப்பாக்கி, தோட்டோ எல்லாம் அர்த்தமற்றவை மிஸ்டர் சார்லஸ் இந்நிலையில் என் ஆற்றலுக்கு ஈடு இணையே கிடையாது.. ஹா.. ஹா.. ஹா..




லிஸா.. நீ ஓடிப் போய் விடு!
சார்ல ஸ்ஸ்ஸ்..
மடார்!




கருப்பு விதவை
சார்லலை நெருங்கிய
கணத்தில்-





எதிர்பாராத திக்கிலிருந்து உதவி வந்து சேர்ந்தது!
காகா கா
விஷ்க்க்
ஐயோ.. சார்லஸை விட்டு விட்டு என்னை நோக்கி வருகிறது! ஏய்ய்.. என்னை நெருங் காதே.. போய் விடு...
விஷ்... விஷ்......


சார்லஸ்.. எழுந் திருங்கள்.. இனியும் இங்கே இருந்தால் ஆபத்து
ர..ஹ்ஹ்ம்..
சார்லஸ்.. ஐயோ.. எழுந்திருங் களேன்!
சார்லஸ்
எ..எ.. என்ன நடந்தது? ஏதோ தீக்கனவு போல் தோன்று கிறது!
திரைச் சேலையில் சிக்கிய சிலந்தி தீயின் பிடியிலும் சிக்கியது
வாருங்கள்.. முதலில் இங்கிருந்து ஓடிப் போய் விடுவோம்!


யா..ஆ
பொறு..! அங்கே பார்.. அ.. அவள்..
யா..ஆ.ஆ
செத்து விட்டாள்.. ..ம்ம்
மீண்டும் ஒரு மறு பிறவி... முந்தையதை விட மிக அழகான, ஆனால் படு ஆபத்தான ஜென்மம்..
4 மாதங்களுக்கு ஒரு முறை மறுபிறவி எடுத்து வந்த அந்த விபரீத விதலை மரண நித்திரையில் ஆழ்ந்தாள்!
பாவம்.. அந்தப் பெண் சார்லட்!
தானே பின்னிய வலையில் சிக்குண்டு வெளியேற
முடியாமல் தவிக்கும் பரிதாப ஜீவன்!
முற்றும்

வருகிறார்....!

# ஏஜெண்ட் 000 !



லயன் காமிக்ஸ்

விரைவில்..... வருகிறது!....

# திகில் நகரில் டெக்ஸ்!




## மாதம் ஒரு ஹீரோ!




| | |
|---|---|
| பெயர் | : லக்கி லூக் |
| வயது | : 48! (பார்த்தால் அப்படியா தெரியுது?) |
| கல்வித் தகுதி | : M.G. (Master of Guns) |
| தொழில் | : கௌ-பாய் (அவ்வப்போது கவிஞனும் கூட!) |
| பொழுது போக்குகள் | : மீன் பிடிப்பது (பெரிய மீன் - சின்ன மீன் எல்லாமே சிக்குவது வாடிக்கை) |
| விரும்புவது | : தனிமை |
| நம்புவது | : ஜாலி ஜம்பர், 35 ரக பிஸ்டல்கள் |
| நம்பாதது | : உள்ளூர் ஷெரீப்களின் வீரத்தை! |
| மற்ற பெயர்(கள்) | : "காமெடி கௌ-பாய்" |
| சாதனை | : நிழலை விட வேகமாக சுடக் கூடிய திறமை! |
| நீண்ட கால சாதனை | : கௌ-பாய்களால் சிரிக்க வைக்கவும் முடியுமென்பதை உலகிற்கு உணர்த்தியது. கார்டூன் காமிக்ஸ் உலகில் இவர் ஒரு pioneer! |

### நமது காமிக்ஸ்களில் லக்கி லூக்

1) சூப்பர் சர்க்கஸ்
2) புரட்சித் தீ
3) பயங்கரப் பொடியன்
4) பிசாசுப் பண்ணை
5) பயங்கப் பாலம்
6) பயங்கரப் பொடியன் - 2
7) ஜெஸ்ஸி ஜேம்ஸ்



லயன்
வாசகர்
ஸ்பாட் லைட்
ஓவிய வாசகர்: S. ஜெய்சங்கர்
திருவணைஞமலை
அட பயலுங்க ஏன் இப்படி ஓடியார் ராளுங்க? பயங்கர குஷி போலருக்கு?
கரோ முரோ கரோ முரோ
ஏண்டா! இப்படி ஓடியார்ரிங்க? என்ன? விஷயம்?
அதுவா பரட்ட! நாங்க டவுனுக்கு சர்கஸ் பார்க போயிருந்தோம் அங்க உன்னை மாறிய ஒரு சிங்கம் சர்கஸ் செஞ்சிச்சி
ஆச்சரியமா இருக்குதே என்ன மாறியேவா?
உண்மதான் பரட்ட! ஆனா உன்னைவிட பலசாலி, திறமைசாலி
அவனுக்கு நீ பிஸ்கோத்து


அடேய் பேமானிகளா! என்ன போய் இப்படி கேவலமாய் பேசிட்டிங்களே
அங்க பாருங்க தடி டார்ஜானோட ஊஞ்சல் வலை?? அதாலே என் வீரத்தை நிருபிக் கறேன்
கொள்ளி கட்ட எங்கே??
ஒக்கே! நான் ரெடி! நெருப்பை கொண்டு வந்து பத்த வையுங்கள் ஹிஹிஹி...
இதோ! கொள்ளி கட்ட. ஹேய்! பரட்ட ரெடியா?
இதோ! வந்து விட்டான் பரட்ட
இத்தோடு ஒழிஞ்சான் பரட்ட
ரெடியா பரட்ட?
ஒ... ரெடி



இதோ கிளம்பிவிட்டது சூப்பர் சானிக்
ஐ!! தாண்டியாச்சி ஆனா தலைல என்ன சூடா? ஐய்யோ நெருப்பு
ஹேர பரட்ட தாண்டிட்டான் ஆனா?
அடப்பாவிங்களா! ஐயோ! நான் கீழே விழப்போறேன் ஐயோ மண்ட
மடோர்!
நம்ம தலமேல விழுந்து தொலைக்க போறான்
பிறகு
அட்டா என்ன ஒரு ராஜ கம்பீரம்
அட்டகாசம் போ!
தென்னங்குச்சிபோல ஒரு கழுத்து! அடச்சீ
இன்னிக்கு தான் உருப்படியா ஒரு காரியம் செஞ்சிருக்க
முற்றும்

# ஏஜெண்ட் ஈகிள்!


ஜெர்மனியின் ஒரு பகுதியான பவேரியாவில் ஒரு பிரம்மாண்டமான மாளிகையின் இரகசிய நிலவறையினுள்ளே, ஒரு நேச நாட்டு உளவாளி சித்திரவதை தாளாமல் உயிரைவிட்டான்...
பிரபு.. பயல் வாயை திறக்காமலேயே செத்து விட்டான்!
தொலைகிறான் விடு! இவனுடைய ஓலம் கேட்க இனிமையாக இருந்தது... அது போதும்!
அந்த ஜெர்மானிய பிரபு நிலவறையை விட்டு வெளியேறும் வரை பொறுமையாக காத்திருந்தார் ஈகிள் என்று பிரபலமடைந்திருந்த நெஞ்சுரம் படைத்த பிரிட்டிஷ் உளவாளி மைக் நெல்சன்!
ஜெர்மானிய இரகசிய போலீஸ் படையான ஜெஸ்டபோவையும் மிஞ்சும் வகையில் ஆள் பலத்தை வைத்துக் கொண்டு கொட்டமடித்து வருகின்றான் இந்த அக்கிரமக்காரன் - ஈரிச் பிரபு


அப்போது அருகிலிருந்த கிரா மத்தில் முகாமிட்டிருந்த ஜெஸ்டபோ சீஃப் க்ளைபரும் அந்த மாளிகை மீது தன் கவனத்தை திசை திருப்பி யிருந்தான்.
அந்தச் சண்டாளன் மைக் நெல்சன் இப்பகுதிக்குள் ஊடுருவியிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. போய் ஈரிச் பிரபுவை எச்சரித்து விட்டு வா!
ஓ.கே.. ஸார்!
மாளிகையை நோக்கி ஜெர்மானிய அதிகாரிகள் இருவர் காரில் விரைந்த போது-
முட்டாள்.. சாலையின் குறுக்கே நிற்கிறான் பார்...! பிரபுவின் விருந்தினர்களில் ஒருவனுக இருக்கலாம்!
குட்மார்னிங்... நண்பர்களே! தயவு செய்து கீழே இறங்கிக் கொள்ளுங்கள்... எனக்கு இந்தக் கார் தேவைப் படுகிறது!
ஏய்... யார் நீ? மனதில் நீ என்ன தான் நினைத்துக் கொண்டிருக் கிறாய்?
நான் தானடா... உங்களுக் கெல்லாம் சிம்ம
சொப்பனமாக இருந்து வரும் - ஈகிள்!


இந்தக் கார் எனக்கு அப் புறமாகத் தான் தேவைப்படும்! அதுவரை இங்கேயே நிற் கட்டும்! -கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள்!
அதையடுத்து, ஈரிச் பிரபுவின் மாளிகை நுழை வாயிலில்
யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?
என் பெயர் ஹாப்ட்மான் வான் அட்லர்... இதோ என் விசிட்டிங் கார்டு... போய் பிரபுவிடம்
அடுத்து -
பிரபு... இவர்தான் ஹாப்ட்மான் வான் அட்லர்!
இராணுவ பயிற்சி நிலையத்திலிருந்து வெளி வந்திருக்கும் நீ இங்கே என்ன நோக்கத்தோடு வந்திருக்கிறாய் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?


ஒற்றைக்கு ஒற்றை வாள் வீச்சில் உங்களுக்கு ஈடு இணை இல்லை என்று ஜனங்கள் பேசிக் கொள்கிறார்கள்... உங்கள் திறமையை என்னிடம் காட்ட நீங்கள் சம்மதிப்பீர்கள் என்றெண்ணி வந்தேன்..
எனக்கு நிகரான எதிரிகளோடு மட்டும்தான் மோதுவேன்... பயிற்சியிலிருந்து சமீபத்தில் வெளி வந்திருக்கும் ஒரு கற்றுக் குட்டி அதிகாரிதானே நீ?
கோழை நீ! அதனால்தான் உன் வம்சாவளி பற்றி எல்லோருமே மட்டரகமாக பேசுகிறார்கள்!
அற்பனே...! எங்கள் குடும்பத்தையா இழித்துப் பேசுகிறாய்?
அதையடுத்து -
வான் அல்ட்பர்க் குடும்பத்தைப் பற்றி இழிவாகப் பேசி விட்டவனை நான் ஒரு போதும் மன்னிக்க முடியாது... எனவே தான் இந்த 'ஒற்றைக்கு ஒற்றை' மோதல்! சாட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக உங்களை வரவழைத்தேன்!






மைக் நெல்சன் வரவழைக்கப் பட்டார்...
நல்ல செல்வாக்குள்ள பணக் காரக் குடும்பம்... பெரும் பாலும் நாஜிகளுக்கு எதிரான கருத்துக் கொண்டவர்கள். என்றாவது ஒரு நாள் பிரிட்டனுக்கு இவர்கள் உதவிகரமாக இருப்பார்கள் என்ற ஒரு காரணத்திற்காகவே நான் துப்பாக்கியைத் தேர்ந் தெடுக்கவில்லை.
ஆட்ட விதிகளில் உங்களுக்கு சந் தேகம் இருந்தால் இப்போதே கேட்டு தெளிவு படுத்திக் கொள்ளுங்கள்!
ம்ம்... இங்கே நீ வந்ததற்காக விரைவிலேயே வருந்தப் போகிறாய்!



...என் குடும்ப கௌரவத்தை நிலைநாட்ட நடக்கும் மோதல் இது. -விடுவேனா உன்னை..!
இதற்கு உங்களுடைய பதில்?
ஓ..! என்னை கொல்லும் முயற்சியா...? ஓ.கே... நானும் அதே வழி முறையில் போகிறேன்!
ஒற்றைக்கு ஒற்றை சவாலை 'நீயா -நானா' மோதல் ஆக் கப் பார்க் கிறார் பிரபு!
தொலைந்தாய்... இத்தோடு!
நெல்சன் கீழே விழுந்த அதே விநாடியில் -
கடைசி பிரார்த் தனையை சொல்லிக் கொள்!
தானல்ல.. நீங்கள் செய்ய வேண்டிய காரியம் அது!
ஈரிச் பிரபு செத்து விட்டார்...
நான் வந்த வேலை முடித்துவிட்டது.
இதென்ன அட்டை? - உங்களுடைய உடுப்பி விருந்து விழுந்தது!
தெரிய வில்லையே!



ஜெஸ்டபோ அட்டை!
இல்லை - நான் ஹாப்ட்மான் வான் அட்லர்!
நீ ஒரு இராணுவ அதிகாரி இல்லை! - ஒரு ஜெஸ்டபோ ஏஜெண்ட்! தன் வலிமை கூடி வருவதால் என்றாவது ஒருநாள் ஜெஸ்டபோ தன்னை தீர்த்துக் கட்ட முயற்சிக்கக் கூடும் என்று பிரபு பயந்தது இப்போது நடந்துவிட்டது!
அப்படி நீங்கள் நம்ப வேண்டும் என்பதுதான் என் விருப்பம்!
'ஜெஸ்டபோ' என்பது ஜெர்மன் இரகசியப் போலீஸ் அமைப்பு. யுத்தத்தின் போது ஜெர்மன் மக்களுக்கே கூட சிம்ம சொப்பனமாய் விளங்கியவர்கள்.
க்ராஷ்!
பிடியுங்கள் அவனை!
காலம் கடந்து ஞானோதயம் பெற்ற மூடர்கள்!


பயிற்சி பெற்ற ஒரு ஏஜெண்டுக்கு மட்டுமே இப்படி ஒரு பாய்ச்சல் சாத்தியம்!
தோட்டத்தில் -
காவலர்களே... விரட்டிப் பிடியுங்கள் அவனை!
ஆவ்வ்..!
வெளியேறி சாலைக்கு ஓடி வந்தார் நெல்சன்.
உயிரற்ற நண்பர்களே... உங்களை அதிக நேரம் காத்திருக்க வைத்து விட்டேனோ? - ஸாரி!


மாளிகை காவலாளிகள் விடாது பின் தொடர்ந்து விரட்டி வந்தனர்.
ஒரு ஜெஸ்டபோ காரில் ஏறி அவன் தப்பியோடு கிறான்!
அவனுடைய கார் மரத்தில் மோதி தீப் பற்றிக் கொண்டு விட்து..
நான் தலைமறை வாகி விட இதுவே தருணம்!
பின்னர் ஜெஸ்டபோ சீஃப் க்ளைபர் ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்த போது -
காரினுள்ளே கருகிப் போன இரு சடலங்கள் உள்ளன. இருவரும் ஜெஸ்டபோ ஆட்கள்... இவர் களை ஏன் ஈரிச் பிரபுவை கொல்ல அனுப்பினீர்கள்?
கொல்லவா? நல்ல கதை...! ஈரிச்சை எச்சரித்து பாது காக்க அல்லவோ நான் இவர்களை அனுப்பினேன்!




## கதை சொல்லும் படங்கள் 9

S. விஜயன்

ஒரு கதையின் மையமான கதா பாத்திரங்கள் தமக்கென ஒரு தனி ஸ்டைலுடன் இருந்தால் தான் கதை எடுபடும்! ஆக்ஷன் ஹீரோ என்றால் அதற்கென்று ஒரு பாணி ...கார்ட்டூன் ஹீரோவுக்கு வேறு மாதிரி ஸ்டைல்..... வில்லனுக்கு ஒரு ... கதாபாத்திரத் தின் தனித்தன்மை ...ளவுக்கு எவ்வளவு அழுத்தமாக அமைகிறதோ - அவ்வளவுக்கு அவ்வளவு வெற்றி அடைய வாய்ப்புள்ளது!


உதாரணத்திற்கு நமது ஸ்பைடரை எடுத்துக் கொள்ளுங்கள் .....! வழக்க மான சூப்பர் ஹீரோக்களைப் போல சொதப்பாமல் இவன் மட்டும் வெற்றிய டைய காரணமென்ன?

1. ஸ்பைடர் ஒரு வித்தியாசமான பேர்வழி! பெரும்பாலான கதாநாயகர்கள் குறையே இல்லாத Mr. Perfect களாக உலா வரும் சமயத்தில் ஸ்பைடர் வில்ல னாக அறிமுகமானான்! இந்த வித்தியாசமான approach வெற்றிக்கு முதல் காரணம்!

2. வில்லனாக இருந்த போதும் சரி - ஹீரோவாக மாறிய பின்னரும் சரி, ஸ்பைடர் ஒரு தற்பெருமைக்காரர்; கோபக்காரர்; மண்டைக்கனம் பிடித்த ஆசாமியாகவே இருந்து வருகிறான்! ஒரு சராசரி மனிதனிடம் உள்ள குறைபாடுகளோடு ஒரு ஹீரோவும் செயல்படும் போது அவனோடு நாம் ஒன்றி விடுவது சிரமமாக இருப்பதில்லை!

So - ஸ்பைடர் கதாபாத்திரத்தின் தனித்தன்மையே அவனது குறைகள் தான்!


கதாபாத்திரங்களுக்குத் தனித்தன்மை கொடுத்திட கதாசிரியருக்கு எவ்வளவு பொறுப்பு உள்ளதோ - அதே அளவிற்கு ஆர்டிஸ்டுக்கும் பொறுப்பு உள்ளது! முகபாவங்கள்..... உடலமைப்பு.... நடமாடும் லாவகம் என்று பல விதங்களில் கதாபாத்திரங்களுக்கு ஓவியர் மெருகூட்ட முடியும்! இதோ ஒரு சிறிய உதாரணம் -




1. முகத்தில் 'பளிச்' வெளிச்சம்! ஆனால் இந்த முகத்தில் தனித்தன்மை ஏதும் இல்லையே!



2. கண்கள் நிழலில் ஆழ்ந்து விட்டால் அடையாளம் தெரியாமல் பண்ணி விடலாம்.



3. அதே முகத்திற்கு இது போன்ற நகாசு வேலை செய்தால் ஒரு திகில் கதை ஹீரோ தயார்!




4. ஒரு பாதி இருளிலும் மறுபாதி வெளிச்சமும் இருந்தால் ஒரு 'திடுக்' effect கிடைக்கும்!

ஒரே முகத்தை நான்கு விதமாக தோன்றச் செய்ய ஒரு திறமையான ஓவியரால் முடியும்!

கோபம், பொறாமை, திகைப்பு என்று பலவிதமான expression களை பென்சிலின் நெளிவு சுளிவு மூலம் கொண்டு வரலாம்!




நல்ல மூடு     கோபம்     உனக்கும் 'பெப்பே' உங்கப்பனுக்கும் 'பெப்பே'



திகைப்பு     நயவஞ்சம்     மெத்தனம்

நிஜ வாழ்க்கையில் சந்திக்கும் ஒவ்வொருத்தரின் முகபாவங்களையும் கவனமாகப் பாருங்கள்! கோபப்படும் போது - புருவம் எப்படி சுருங்குகிறது; கண்கள் விரிகின்றன... என்று கவனியுங்கள்! சிரிக்கும் போது கன்னத்தில் ஏற்படும் பூரிப்பை; புருவங்களின் வளைவைக் கவனியுங்கள்! சின்னச் சின்ன மாற்றங்களை அட்சர சுத்தமாக சித்திரங்களுக்குக் கொண்டு வந்தால் தான் சித்திரங்கள் வெற்றியடையும்!

அடுத்த விஷயம் படங்களின் கோணம் - அதாவது angle பற்றியது! கீழே உள்ள படங்களைப் பாருங்களேன்



1     2     3

படம் எண்: 1ல் நம் கண்பார்வை பாயும் angle ல் சித்திரம் போடப்பட்டுள்ளது. அதே சமயம் படம் எண்2 - மேல் நோக்கி focus செய்யப்பட்ட கோணத்தில் வரையப்பட்டுள்ளது. மேலேயிருந்து ஒரு கரிய உருவம் அறைக்குள் எட்டிப் பார்ப்பது தெரிகிறது. படம் எண் 3 - top angle லிருந்து கீழ் நோக்கி focus செய்யப்பட்டுள்ளது!


ஆக ஒரே சூழ்நிலைக்கு விதம் விதமாய் படம் வரைவது மூலம் கதையில் தேக்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது ஓவியரே!

இன்னும் வரும்....

# மாதம் ஒரு வாசகர்

| | | |
|---|---|---|
| பெயர் | : | J. சங்கீதா |
| முகவரி | : | 4B, சேகர் வர்மா நகர், அரக்கோணம் ரோடு, திருத்தணி. |
| கல்வித் தகுதி | : | ஆங்கில இலக்கியம் முதல் ஆண்டு |
| பொழுது போக்கு | | விளையாடுவது, நாவல், பாக்யா, லயன் காமிக்ஸ், கவிதை படிக்க மட்டுமே பிடிக்கும். |
| லயன் காமிக்ஸ் படிப்பது | : | சிறுவயதிலிருந்தே |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | : | அப்பா மூலம் |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் | : | லயன் காமிக்ஸ், ஜூனியர் போஸ்ட் பாக்யா, நக்கீரன், ஜூனியர் விகடன் முன்பு இந்தியா டுடே, தற்போது இல்லை. |
| இதுவரை வந்த கதைகளில் மிகவும் பிடித்தது | : | எல்லாக் கதைகளும். முக்கியமாக லக்கி லூக். |
| உங்களை தவிர வீட்டில் வேறு யாரும் படிக்கிறார்களா? | : | அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, நான் மற்றும் என் Friends |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? | : | சேர்த்து வைப்பேன் |

( சாரி போட்டோ இல்லை )



# க்ரைம் க்விஸ் (18) விடை

'இரத்தப் படலம் V" இதழில் வெளியான க்ரைம் க்விஸ் (18) கடினமாக அமைந்ததால் ஏராளமான வாசகர்களின் கணிப்பு தவறாகிவிட்டது! ஒரேயொரு வாசகர் மட்டும் சரியான விடை எழுதியுள்ளார். அவருக்கு ஸ்பெஷல் பாராட்டுக்கள்!

செ. சங்கர்,
1/8, அக்ராஹாரம்,
பாணாம்பட்டு அஞ்சல்,
வழி கோலியனூர் - 605 103.

இந்த வாசகருக்கு நமது வாழ்த்துக்களுடன் ஒரு லயன் டி-ஷர்ட்டும், கீ-செயினும் அனுப்பப் படுகிறது! இனி சரியான விடையைப் பார்ப்போமா?

**விடை**

தோட்டத்தில் 'வாக்' போனதாகச் சொன்ன பெண்தான் குற்றவாளி. ஏனெனில் முதல் பெண்மணி 'கொடி இடையோர் சங்கத்தின்' உறுப்பினராக உள்ளார். கொலை நடந்த இடத்தில் கேக் பாதி சாப்பிட்டு மீதி உள்ளது. கேக்கில் கொழுப்புச் சத்து உள்ளதால் அதைச் சாப்பிடுபவர்கள் குண்டாவார்கள். அதனால் முதல் பெண்மணி இல்லை. இரண்டாவது ஆள் இன்சுலின் ஊசி போட்டுக் கொள்பவர். அவருக்குச் சர்க்கரை வியாதியாகையால் அவரும் கேக் சாப்பிட மாட்டார். எனவே மூன்றாவது பெண்தான் கொலை செய்தவள். கேக்கை வைத்து டேஞ்சர் கண்டுபிடித்தார்.

இம்மாத க்ரைம் க்விஸ் - 21க்கு விடையனுப்பும் போது கீழ்க்கண்ட கூப்பனை ஒட்டியனுப்ப வேண்டும்.

**க்ரைம் - க்விஸ் (21)**
C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
த. பெ. எண். 374
சிவகாசி - 626 123.

கூப்பன்கள் இல்லாத விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

**விடையனுப்பக் கடைசித் தேதி 10.7.95**

# புக் மார்க்கெட்

**தேவை**

லயன் சூப்பர் ஸ்பெஷல் - 87
கத்திமுனையில் மாடஸ்டி
டிராகன் நகரம்
வைகிங் தீவு மர்மம்

**விற்பனைக்கு**

**மினி லயன்**
தென் அமெரிக்காவில் மாயாவி
விற்பனைக்கு ஒரு ஷெரீப்
துப்பாக்கி முனையில்
பயங்கரப் பயணம், அதிரடி மன்னன்
இரத்த வெறி, புதிர் குகை

முகவரி : எம். ஜோசப், *15, வேலம்பாளையம், திருப்பூர் - 641 652.*

**தேவை**

ஆர்ச்சி கதைகள், ஸ்பைடர்
கதைகள் அத்தனையும்
இரத்தபடலம் I & II

**விற்பனைக்கு**

BATMAN கிறுக்கனா?
சிரிக்கும் மரணம்
சிரித்துக் கொல்ல வேண்டும்!

முகவரி : அ. ரகுநாதன், *268, பெரியார் காலனி, அனுப்பர் பாளையம், திருப்பூர்.*

**தேவை**

லயன்

கத்தி முனையில் மாடஸ்டி
அதிரடி வீரர் ஹெர்குலஸ்
பாதாளப் போராட்டம்
கானகத்தில் கண்ணாமூச்சி
மரணக் கோட்டை

முகவரி : கே. அருண், C/o. M. S. *துரைசாமி, வி. ஜி. வலசு,*
*பழனித் தாலுகா, அண்ணா மாவட்டம்.*



## இரத்தப் படலம் V *வாசகர் கடிதம்*

- **ஆர். திருநாவுக்கரசு,** வழுக்குப்பாறை..

இரத்தக் கரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் இரத்தப் படலம் V ஐ வெளியிட்டு அசத்தி விட்டீர்கள். கதைக்கு சித்திரங்கள் ஒரு பிளஸ் - பாயின்ட். மற்றும் வித்தியாசமான சைஸ். ஆக மொத்தத்தில் இரத்தப்படலம் ஒரு அட்டகாசமான கதை & சித்திர விருந்து!

- **எல். வெங்கடேஸ்வரன்,** அய்யம்பாளையம்..

ஐந்தாம் பாகத்தின் இறுதியிலும், முதலிலும் கொடுத்திருந்த நிகழ்ச்சிகளின் சுருக்கம் கச்சிதமாக இருந்தது!

- **எம். அருண்,** காட்டுமன்னார்கோவில்..

இரத்தப்படலத்தின் அனைத்து அம்சங்களும் வழக்கம் போலவே Super. அச்சு எழுத்தும் Super.

XIII ன் நிலை பரிதாபத்திற்குரியது! வில்லியம் எப்படித்தான் இவ்வளவு அட்டகாசமாகப் படம் வரைகிறாரோ! அது சரி... இந்த வான் ஹாமே எப்பொழுதுதான் இரத்தப்படலத்தை முடிக்கப் போகிறார்?

- **எஸ். ஜெய்சங்கர்,** தி.மலை - 606 601.

"இரத்தப்படலம் V"யை அதிரடியாகத் தந்து எங்களை அசத்தி விட்டீர்கள். லயனின் புதிய சைஸ் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. கதையை ஜவ்வு போல் இத்தனை பாகங்களுக்கு இழுத்தாலும் சுவாரஸ்யம் குறையாமல் கொண்டு சென்ற கதாசிரியருக்கு நன்றி!

- **எம். சோமசுந்தரம்,** தருமபுரி.

'இரத்தப்படலம் V' சூப்பர் ஜெட் வேகம். ஆறாவது பாகம் எப்போது வரும் என ஏங்க வைக்கிறது.


அறிமுகம்
நிர் : 1
லயன் காமிக்ஸ்
வருகிறார்...
நீதி தேவன் நம்பர் 1
எதிர்காலக் கதைதான்
ஆனால் - எது மாதிரியும் இல்லாத புது மாதிரி இது!
அதிரடி நிர் : 1


அறிமுகம்
நிர் : 2
வருகிறார்...
மிஸ்டர் பெல்!
லயன் காமிக்ஸ்
வித்தியாசமான
சாகஸ வீரர்
இவர்!


லயன் காமிக்ஸ்
வருகிறார்...
ஆக்ஷன் ஹீரோ
நிக் தண்டர்






டேஞ்சருக்கு எப்படித் தெரிந்தது?